உணவு டெலிவரி ஊழியர்களுக்கு ஓய்வறை

# இதுதான் ‘திராவிட மாடல்’ அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஜூன்.13-

உணவு டெலிவரி செய்யும் ஊழியர்களுக்கும் ஓய்வறை அமைத்து துன்பத்தில் உழல்வோருக்கும் ஆதரவுக் கரமாக இருப்பது தான் திராவிட மாடல் அரசு என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள் ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை delivery செய்யும் gig ஊழியர்களுக்குக் கழிப்பறை, AC, charging point, வாகன நிறுத்தம் உள்ளிட்ட வசதிகளுடன் Scandinavian வடிவமைப்பில் இணையத் தொழிலாளர் கூடம் (lounge) முதற்கட்டமாக, பெண் பணியாளர்கள் அதிகம் பணியாற்றும் சென்னை அண்ணாநகரில் தொடங்கப்பட்டுள்ளது.**

**இந்தியா எதிர்காலத்தில் பின்பற்றும் திட்டங்களை இன்றே நிறைவேற்றுவதுதான் தமிழ்நாடு style!**

**வெயிலில் வாடுபவருக்கு நிழல் மரமாக,**

**தாகத்தில் தவிப்பவருக்கு ஒரு குவளைத் தண்ணீராக,**

**துன்பத்தில் உழல்வோருக்கு ஆதரவுக்கரமாக இருப்பதுதான் Dravidian Model!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில்

# தூய்மைப் பணியாளர் நல வாரியத் தலைவராக - திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி - பழங்குடியினர் நல வாரியத் தலைவராக - கா.கனிமொழி நியமனம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூன்.13-

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் தூய்மை பணியாளர் நல வாரியத்தின் தலைவராக டாக்டர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி மற்றும் பழங்குடியினர் நல வாரியத்தின் தலைவராக திருமதி கா.கனிமொழி ஆகியோரை நியமித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தூய்மை பணியாளர் நல வாரியம் மற்றும் பழங்குடியினர் நல வாரியத்தின் கீழ் ஆயிரக்கணக்கான நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, அவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கென மருத்துவ உதவிகள், கல்வி உதவிகள், ஈமச் சடங்கு நிதி உதவி உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், ஆய்வுக் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு, மேற்காணும் வாரியங்கள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

மேற்காணும் இரண்டு நல வாரியங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களைச் சீரான இடைவெளிகளில் ஆய்வு செய்து, திட்டங்களானது நல வாரிய உறுப்பினர்களுக்கு சென்று சேர்வதை உறுதி செய்திடவும், திட்டங்கள் குறித்து அவ்வப்போது கள ஆய்வு செய்திட ஏதுவாகவும், தற்போது தூய்மை பணியாளர் நல வாரியத்திற்கு டாக்டர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமியை தலைவராகவும் மற்றும் பழங்குடியினர் நல வாரியத்திற்கு திருமதி. கா.கனிமொழியைத் தலைவராகவும், நியமனம் செய்து அரசு ஆணை யிட்டுள்ளது. மேலும், புதிதாக நியமனம் செய்யப்பட்ட தலைவர்களின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அளித்த வெள்ள நிவாரணப் பொருட்களில் கூட ஸ்டிக்கர் ஒட்டிய

# அடிமைகளுக்கு விளம்பரம் பற்றி பாடம் நடத்த அருகதை இல்லை!

## எடப்பாடி பழனிசாமிக்கு – அமைச்சர் தங்கம் தென்னரசு கடும் கண்டனம்!

சென்னை, ஜூன் 13 -

**“நாள்தோறும் பல பெயர்களைச் சூட்டிய விளம்பர ஆட்சியைத்தான் அ.தி.மு.க. நடத்தியது. ஜெயலலிதா கொண்டு வந்த திட்டத்திலேயே தன் பெயரைப் பதித்த பழனிசாமி விளம்பரம் பற்றி எல்லாம் பேசலாமா? பழனிசாமிக்கு எத்தனை உண்மைகளை எடுத்துச் சொன்னாலும் அவரது பச்சைப் பொய் பேசும் பழக்கம் மட்டும் மாறப் போவதில்லை” என்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

“மக்களிடம் மனுக்களைப் பெறுவதற்குக் கூட பல பெயர்களைச் சூட்டி மக்களை ஏமாற்றுகிறது திமுக அரசு” என எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அறிக்கை விட்டிருக்கிறார்.

அரசின் சேவைகள் அனைத்தும் மக்களுக்கு எளிதாகக் கிடைப்பதற்காகத் திராவிட மாடல் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளைக் கண்டு தூக்கமிழந்து திரியும் பச்சைப் பொய் பழனிசாமி, திமுக அரசின் மீது எப்படியாவது அவதூறு பரப்ப வேண்டும் எனும் அற்பப் புத்தியில் பொய்களை உருட்டி, திரட்டி அறிக்கை வெளியிடுகிறார். அதற்கு முன்பு கொஞ்சமும் யோசிக்க மாட்டீர்களா பழனிசாமி. அ.தி.மு.க. ஆட்சியில் மக்கள் குறை தீர்ப்பு திட்டங்களின் லட்சணம் பற்றியெல்லாம் தெரியாமல் அறிக்கை என்ற பெயரில் தினமும் எதையாவது உளறிக் கொட்டிக் கொண்டிருக்கிறீர்கள்?

**அ.தி.மு.க. நடத்திய விளம்பர ஆட்சி!**

மாவட்டங்களில் திங்கள் கிழமைகளில் மக்கள் குறைதீர்க்கும் நாள், மாதாந்திர மனுநீதி நாள், விவசாயிகள், மீனவர்கள் குறைதீர்க்கும் நாள், அம்மா திட்டக் குறைதீர்க்கும் நாள், ஓய்வூதியதாரர்கள் குறைதீர்க்கும் நாள், முதலமைச்சரின் தனிப்பிரிவு, அம்மா கால் சென்டர் என்று நாள்தோறும் பல பெயர்களைச் சூட்டிய விளம்பர ஆட்சியைத்தான் அதிமுக நடத்தியது.

இவையெல்லாம் போதாது என்று ‘முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டம்’ என்ற பெயரில் புதிய திட்டம் ஒன்றை 2019 ஆகஸ்ட் 19-ம் தேதி கொண்டு வந்தார் அன்றைய முதல்வர் பழனிசாமி. அதாவது சரியாக நடந்ததா? என்றால் இல்லை. அதன்பிறகு அதற்கும் மேலாக 12.78 கோடி ரூபாய் செலவில் டிஜிட்டல் குறைதீர்ப்பு திட்டம் ஒன்றை பழனிசாமி அறிவித்தர். எல்லாக் குறைதீர்ப்பு அமைப்புகளையும் ஒருங்கிணைத்து, குறைகள் விரைந்து களையப்படுவதைக் கண்காணிக்கப் போகிறது என்று புது முலாம் பூசினார். அப்படியென்றால் அதுவரை குறைதீர்ப்பு அமைப்புகள் எதையும் செய்யவில்லை தானே!

**புதுதோசை சுட்ட பழனிசாமி!**

இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் மேலாக 2021 சட்டமன்றத் தேர்தலில் புதுத் தோசை ஒன்றைச் சுட்டார் பழனிசாமி. அந்தத் தோசைக்கான மாவு ஜெயலலிதா ஆட்சியிலிருந்து எடுக்கப்பட்டது.

2016 சட்டசபைத் தேர்தல் நேரத்தில் அவசர அவசரமாக ’அம்மா கால் சென்டர்’ திட்டத்தை ஜெயலலிதா கொண்டு வந்தார். ’1100 என்ற எண்ணில் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். மக்களின் குறைகள் உடனுக்குடன் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்’ என்ற சொன்னார் ஜெயலலிதா.

கோடிக்கணக்கில் பணம் செலவழித்து என்ன பயன்? 2018-ம் ஆண்டு 3,43,418 அழைப்புகளும் 2019-ம் ஆண்டு 2,51,886 அழைப்புகளும் வந்தன. அதாவது முந்தைய ஆண்டைவிட 2019-ம் ஆண்டு அழைப்புகளின் எண்ணிக்கை குறைந்ததே திட்டத்துக்கு வரவேற்பில்லை என்பதைக் காட்டியது, காரணம் அம்மா கால் சென்டரில் பிரச்சினைகளைக் கேட்டுக் கொள்கிறார்களே தவிரத் தீர்க்கப்படுவதில்லை என்பதுதான்.

தடபுடலாக ஆரம்பிக்கப்பட்ட அம்மா கால் சென்டர் திட்டமே 5 ஆண்டுகளாகத் தூங்கி வழிந்து கொண்டிருந்த நிலையில், ஜெயலலிதா சுட்ட தோசையை 5 ஆண்டுகள் கழித்து 2021 சட்டமன்றத் தேர்தலில் புரட்டி போட்டார் பழனிசாமி. ஜெயலலிதா தொடங்கிய ‘அம்மா கால் சென்டர்’ திட்டத்தை முதலமைச்சரின் உதவி அழைப்பு மையம் என புதுசாக மேக் அப் போட்டுக் கொண்டு வந்தார் பழனிசாமி. இதில் கொடுமை என்ன தெரியுமா? ஜெயலலிதா கொண்டு வந்த அம்மா கால் சென்டர் எண்ணும் பழனிசாமி கொண்டு வந்த முதல மைச்சரின் உதவி அழைப்பு மையம் எண்ணும் 1100 என்ற ஒரே நம்பர்தான்.

இப்படி ஜெயலலிதா கொண்டு வந்த திட்டத்திலேயே தன் பெயரைப் பதித்த பழனிசாமி விளம்பரம் பற்றி எல்லாம் பேசலாமா? பொதுமக்கள் அளித்த வெள்ள நிவாரணப் பொருட்களில் கூட ஸ்டிக்கர் ஒட்டி விளம்பரம் தேடிய அடிமைகள் விளம்பரம் பற்றி எல்லாம் பாடம் நடத்த அருகதை இல்லை.



தன்னுடைய அடிமை அதிமுக ஆட்சியில் தமிழ்நாட்டு மக்கள் நலன் மீது துளியும் அக்கறையின்றித் தனது பதவியைத் தற்காத்துக் கொள்ளப் பாஜக எஜமானர்களுக்கு ஏவல் பணி செய்தே காலம் தள்ளிய பழனிசாமிக்கு மக்களின் குறைகளை உடனுக்குடன் செவிமடுத்துத் தீர்த்து வைக்கும் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் எல்லாம் கண்ணுக்குத் தெரிய வாய்ப்பில்லைதான்.

அ.தி.மு.க. ஆட்சியில் மக்களின் குறைகள் தீர்த்தோம் என்கிறார் பழனிசாமி கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில், மக்களின் மாபெரும் பிரச்சனையே பழனிசாமியும் அவரது அமைச்சர்களும்தான். அவர்களிடம் இருந்து தமிழ் நாட்டு மக்களைக் காப்பாற்றி மக்களின் குறைகளைப் போக்கியது திராவிட மாடல் ஆட்சிதான்.

**பழனிசாமியின் பம்மாத்து நாடகம்!**

முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற நூறு நாட்களில் தேர்தல் பரப்புரையின் போது பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய தீர்வு காணப்படும் என்ற வாக்குறுதியை அளித்தார். அதேபோன்று 07.05.2021-இல் தாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பொதுமக்களின் குறைகள் மீது விரைந்து தீர்வு காண “உங்கள் தொகுதியில் முதலமைச்சர் “ என்ற தனித்துறையையே உருவாக்கி உத்தரவிட்டார். 100 நாட்கள் முடிவில் 2.29 இலட்சம் மனுக்கள் ஏற்பளிக்கப்பட்டு உரிய பயன்கள் பயனாளிகளுக்குச் சென்று சேர்ந்தன. இவை எல்லாம் தெரியாதது போல நடிக்கும் பழனிசாமியின் பம்மாத்து நாடகம் மக்கள் முன் எடுபடாது.

அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் நீண்ட காலமாக நிறைவேற்றப் படாமல் இருக்கும் தேவைகளை அந்தந்த தொகுதி களின் எம்.எல்.ஏ-களின் பரிந்துரையின் அடிப்படையில் நிறைவேற்றும் நோக்கத்துடன் ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ திட்டத்தை 7.5.2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தார்கள். இதன் மூலம் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாத திட்டங் களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்திச் செயல்படுத்தப்படு வருகின்றன. சாலை வசதிகள், மருத்துவ வசதிகள், பாலங்கள், சாலைகள், பள்ளிகள், கல்லூரிகள், பேருந்து நிலையங்கள் என இத்திட்டத்தின் மூலம் 2023-2024 ஆம் ஆண்டில் ரூ.10946 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 783 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 335 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 2024-2025 ஆம் ஆண்டிற்கு 3,496 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 468 திட்டப் பணி களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது வரை ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ திட்டத்தின் மூலம் ரூ.14,442 கோடி மதிப்பீட்டில் 1251 திட்டப் பணிகள் நடை பெற்று வருகின்றன.

அதே போல மக்களுடன் முதல்வர் திட்டம் நகர்ப்பகுதி , ஊரகப்பகுதி என அனைத்துப் பகுதிகளிலும் மூன்று கட்டங்களாக நடைபெற்று முடிந்துள்ளது. முதற்கட்டமாக, 38 மாவட்டங்களின் நகர்ப்புறப் பகுதிகளில், நவம்பர் 2023 முதல் ஜனவரி 2024 வரை 2,058 முகாம்கள் நடத்தப்பட்டன. இம்முகாம்களில் 9.05 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, முறையாகத் தீர்வு காணப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக 37 மாவட்டங்களின் கிராமப்புறப் பகுதிகளில், சூலை 2024 முதல் செப்டம்பர் 2024 வரை, 2,344 மக்களுடன் முதல்வர் முகாம்கள் நடத்தப்பட்டன. இம்முகாம்களில் 14.64 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, 12.81 இலட்சம் மனுக்கள் தீர்வு காணப்பட்டுள்ளன. இத்திட்டம், ஏழை எளிய,விளிம்பு நிலையிலிருக்கும், அரசு சேவைகள் சரியாகச் சென்றடையாத பகுதிகளில் வசிக்கும் மக்களிடம் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**225 முகாம்கள் 80 ஆயிரம் மனுக்களுக்குத் தீர்வு!**

மூன்றாம் கட்ட முகாம்கள், 2025 சனவரி மாதம் முதல், 24 மாவட்டங்களில் 184 வட்டங்களில் (நிலை-1), ஏழை, எளிய, விளிம்பு நிலையில் உள்ள ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள் அதிக அளவில் வசிக்கும் 1,270 கிராமப் பஞ்சாயத்துகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் மக்களது குறைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கம், மிகவும் ஏழை, எளிய, எளிதில் அரசின் சேவைகள் சென்றடையாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அரசு வழங்கும், 15 துறைகளின் 44 சேவைகளை அவர்களின் இருப்பிடங்களுக்கே கொண்டு சேர்ப்பதாகும். இத்திட்டத்தில், 2025 மார்ச் மாதம் வரை 225 முகாம்கள் நடத்தப்பட்டு, 1.09 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 80,000 மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்பட்டுள்ளன.

இதுமட்டுமில்லாமல் முதலமைச்சரின் உதவி மையம் சென்னை, கோட்டூர்புரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் மக்களின் குறைகளும் சந்தேகங்களும் தீர்க்கப்பட்டுள்ளன.

இப்படித் தனது ஆட்சியில் சொல்வதற்கு எதுவும் இல்லையே, எனும் விரக்தியில் பழனிசாமி உளறித் திரிவதைப் பார்த்தால் பரிதாபம் தான் வருகிறது.

வெற்றுப் பொய்களைப் பேசி அரசியல் செய்யலாம் எனப் பிதற்றித் திரிகிறார் பழனிசாமி, ‘எத்தை தின்றால் பித்தம் தெளியும்’ என்பார்கள், ஆனால் பழனிசாமிக்கு எத்தனை உண்மைகளைச் சொன்னாலும் பச்சைப் பொய் பேசும் பழக்கம் மட்டும் மாறப் போவதில்லை.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# முதலமைச்சரின் வலியுறுத்தலின்படி - கச்சத்தீவை மீட்க நடவடிக்கை எடுத்திடுவீர்!

## பிரதமருக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜூன்.13-

**வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீரசாமி கச்சத்தீவை மீட்டுத் தரும்படி பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது :

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையயே உள்ள பால்க் நீரிணைப்பகுதியில் அமைந்துள்ள 285 ஏக்கர் பரப்புள்ள கச்சத்தீவு இந்தியாவுக்கு சொந்தமானது. மனிதர்கள் யாரும் வசிக்காத இந்த சிறிய தீவை, தமிழ்நாடு மீனவர்கள் தாங்கள் மீன்பிடிக்கச் செல்லும்போது, இளைப்பாறவும் தங்கள் மீன்பிடி வலைகளைக் காய வைக்கவும் பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் ஒன்றிய அரசு, 1976 ஆம் ஆண்டு இலங்கையோடு கடல்சார் எல்லைகளை நிர்ணயிக்க செய்து கொண்ட ஒப்பந்தத்தின்போது, இந்த தீவை இலங்கை அரசுக்குக் கொடுத்து விட்டது. இதனால் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் இந்த தீவுக்குச் செல்லவும், அதன் வழியாக கடலுக்குள் சென்று மீன் பிடிப்பதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால், கடந்த 50 ஆண்டுகளாகத் தமிழ்நாடு மினவர்கள் தங்கள் மீன்பிடி தொழில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர்.



இதுகுறித்து கடந்த 02.04.2025 அன்று, தமிழ்நாடு சட்டப் பேரவையில், தமிழ்நாடு அரசு, இந்த கச்சத்தீவை உடனடியாக மீட்கத்தேவை யான நடவடிக்கைகளை எடுக்கும்படி ஒன்றிய அரசுக்குக் கோரிக்கை வைத்து, அ.தி.மு.க மற்றும் பி.ஜே.பி. உள்ளிட்ட அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் இயற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியுள்ளது தங்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகின்றேன்.


அந்தத் தீர்மானத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒரு காலத்தில் இந்திய மீனவர்களும் இலங்கை மீனவர்களும் சேர்ந்து பயன்படுத்திய இந்தப் பகுதியில் தற்போது, தமிழ்நாடு மீனவர்கள் அவ்வப்போது இலங்கை இராணுவத்தினால், எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் குற்றம் சாட்டி கைது செய்வதும், தாக்கப்படுவதும் தொடர் நிகழ்வுகளாகி விட்டதைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

கடந்த 2024 ஆம் ஆண்டில் மட்டும் அய்நூறுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏறத்தாழ நாளொன்றுக்கு இரண்டு மீனவர்கள் வீதம் சென்ற ஆண்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள் கூட இன்னமும் 97 மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் இருப்பதாக ஒத்துக் கொண்டுள்ளார். மேலும், தமிழ்நாடு மீனவர்கள், அடிக்கடி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதும் அவர்கள் வாழ்வாதாரங்களான படகுகளும், மீன்பிடி வலைகளும் பறிமுதல் செய்யப்படுவதும் நடந்து வருவதாகக் கூறியுள்ளார். 2014 ஆம் ஆண்டு தாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் ஒரு மீனவர் கூட இலங்கைப்படையினரால் தாக்கப்படவோ, அச்சுறுத்தப்படவோ மாட்டார்கள் என்று கூறிய வாக்குறுதிக்கு மாறாக இது தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இதனால்தான், எங்களது முதலமைச்சர் அவர்கள் கூட தமிழக மீனவர்கள், என்பவர்கள் இந்திய நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் என்பதை ஒன்றிய அரசு மறந்துவிடுகிறது போல தெரிகின்றது என வேதனையுடன் குறிபிட்டுள்ளார். மேலும் இந்த பிரச்சினையை ஒன்றிய அரசு பிராந்தியக் கண்ணோட்டத்துடன் பார்க்காமல், இந்திய நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே, அதாவது இரு நாடுகளுக்கிடையே உள்ள பிர ச்சினையாக அணுக வேண்டும், நமது இந்திய குடிமக்களாக உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்தியக் குடிமக்களன் வாழ்வுரிமைச் சார்ந்த பிரச்சனையாகவும் பார்க்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறி யுள்ளார்.

இந்நிலையில் பொது மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, பிரதமர் அவர்கள் கச்சத்தீவை மீண்டும் திரும்பப் பெறுவதற்கான ராஜிய நடவடிக்கைகளை உடனே மேற் கொண்டு இந்திய மீனவர்களின் உரிமைகளை நிலை நாட்டும் வண்ணம் நல்ல தீர்வைக் காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி தனது கடிதத்தில் கூறியுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நேற்று முன்தினம் (11.06.2025) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்ததைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்டம், நீலமங்கலம் தனியார் பள்ளி கலையரங்கில் மகளிர் திட்டத்தின் சார்பில் 530 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.52.11 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் வழங்கினார்கள், இந்நிகழ்வில் மகளிர் திட்ட இயக்குனர் சுந்தர்ராஜன், வங்கி மேலாளர் ரஞ்சித், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பேரூர் ஆ. நடராஜன்

ஜூன் 13 (2017)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டதோடு, தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்தவர்.**

**கழகத்தின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துவக்க காலத்திலேயே, அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**கழக தொழிலாளர் அணிச் செயலாளராகவும் – தொ.மு.ச. பேரவைத் தலைவராகவும், தமிழ் மாநிலக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.**

**1977, 1984, 1989, 1996 ஆகிய நான்கு முறை பேரூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**“தொழிலாளர் நலனுக்காகவே தினசரி சிந்தித்து வாழ்ந்து வந்த ஒரு மாபெரும் தூணை இழந்து நிற்கிறது கழகம்” என கழக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.